அப்போது கூட நாம் இந்த இடத்தை அபகரிக்கும் விடயத்திற்கு சம்மதம் தெரிவிக்கவில்லை. இவை தமிழ் மக்களுடைய காணிகள், எனவே மக்களுக்கே வழங்கப் படவேண்டும் என்ற அடிப்படையில் நாம் கருத்துக்களைத் தெரிவித்துவந்தநிலையில் அவர்களுடைய இந்த ஆக்கிரமிப்பு மற்றும், கனியமணல் அகழும் முன்னெடுப் புக்களை கிடப்பில் போடப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த 24.10.2018 அன்று வடமாகாணசபையின் முதலாவது ஆட்சிக்காலம் நிறைவிற்கு வந்தபின்னர், இது தொடர்பான கூட்டங்களுக்கு வடமாகாணசபையால் அமைக்கப்பட்ட குழுவினை அழைப்பதுமில்லை, இந்த நடவடிக்கைகள் தொடர்பில் அந்தக் குழுவினருடன் கலந்துரையாடுவதுமில்லை. இவ்வாறானதொருசூழலில் இது வரைகாலமும் கிடப்பில் போடப்பட்டிருந்த இந்த கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்திற்குரிய இல் மனைட் தொழிற்காலை அமைப்பதற்கான காணி அபகரிப்பு விடயம் மற்றும், கனியமணல் அகழ்விற்கான செயற்பாடுகள் என்பன தற்போது மீண்டும் முனைப் புப்பெறத் தொடங்கியுள்ளன. அந்த வகையில் இல்மனைட் தொழிற்சாலை அமைப்பதற்கென 18 தமிழ் மக்களுக்குச் சொந்தமான, 44 ஏக்கர் அறுதி உறுதிக்காணிகளை கொக்கிளாய் கிழக்குப் பகுதியில், காணிகளுக்குரிய தமிழ் மக்களின் அனுமதியைப் பெறாது கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் வேலிகளை அமைத்து அபகரித்து தமது அடாவடித் தனமான செயற்பாட்டினைச் செய்துள்ளனர். கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனத்தின் இத்தகைய நடவடிக்ககைளை ஏற்றுக்கொள்ள முடியாது. அத்தோடு அண்மையில் கொக்கிளாய் கிழக்கு, கொக்கிளாய் மேற்கு, கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் வடக்கு, கொக்குத்தொடுவாய் மத்தி, கொக்குத்தொடுவாய் தெற்கு ஆகிய ஆறு கிராம அலுவலர் பிரிவுகளிலுமுள்ள பொது அமைப்புகள், பொதுமக்கள் எனப் பலரும் கையொப்பமிட்டு, இந்த காணி அபகரிப்பதை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும், இந்தக் காணிகளுக்குரிய எமது தமிழ் மக்களுக்கே சேரவேண்டும் என்பதான மகஜர் ஒன்றினை முல்லைத்தீவு மாவட்ட செயலாளரிடம் வழங்கியதுடன், இன்னும் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கும் அந்த மகஜரின் பிரதிகள் அனுப்பிவைக்கப்பட்டதுடன், என்னிடமும் அந்த மகஜரின் பிரதியினை அப்பகுதி மக்கள் கையளித் திருந்தனர்.

இவ்வாறாக அந்தப் பகுதி மக்கள் பெரும்பாலானோர், அப்பகுதியில் அபகரிக்கப்பட்டுள்ள இந்தக் காணிகள், காணிகளுக்குரிய மக்களுக்கெ வழங்கப்படவேண் டுமென கோரியிருக்கின்றனர்.

இந் நிலையில் தமிழ் மக்களுக்குதிய இந்த அறுதி உறுதிக்காணிகளை கனிப்பொருள் மணல் கூட்டுத் தாபனம் எவ்வாறு ஆக்கிரமிக்கமுடியும்? இவ்வாறு மக்களுக்குரிய காணிகளை அனுமதியின்றி அரச திணைக்களங்களும், கூட:டுத்தாபனங்களும் அபகரிப்பது பொருத்தமான செயற்பாடல்ல. எனவே கனிப்பொருள் மணல் கூட்டுத்தாபனம் தாம் அபகரித்துள்ள இந்தக் காணிகளை உடனடியாக விடுவிக்கவேண்டும்.

அவ்வாறாக இந்த காணிகளை விடுவித்த மக்களுக்கு வழங்குவதற்குரிய நடவடிக்கைகளை, உரிய பொறுப் புவாய்ந்த அதிகாரிகளும் முன்னெடுக்கவேண்டும் என் றார் திரு துரைராசா ரவிகரன்.

# அந்நியசக்திகளின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராக தமிழர் தேசம் போராடவேண்டும்

நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

யூன் 30, 2021
சீன நிறுவனத்தின் கடலட்டை விவகாரத்தில் மட்டுமல்ல, தமிழீழ தாயக மக்களது சம்மதம் பெறப்படாத எந்தவொரு அந்நியசக்திகளின் நடவடிக்கைகளுக்கும் எதிராகவும் தமிழர் தேசம் போராட வேண்டும் என நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழர் தாயகத்தின் பூநகரி கௌதாரிமுனை பகுதியில் சீன நிறுவனம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தாயக மக்களது சம்மத்தினை பெறாது மேற்கொள்ளப்பட்டு வரும் கடலட்டை வளர்ப்பு தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு, தமிழர் தேசத்தின் இறைமை என்பது நிலத்தில் மட்டுமல்ல, தமிழர் தேசத்துக்குரிய கடலிலும் உண்டென்ற நிலையில் எந்தவொரு அந்நியசக்திகளின் நடவடிக்கைகளுக்கும் தாயகமக்களின் சம்மதம் பெறப்பட வேண்டும்.

அவ்வாறு தமிழ்மக்களின் சம்மதத்தினை பெறாத எந்தவொரு அந்நியசக்திகளின் நடவடிக்கைகளுக்கும் ஆக்கிரமிப்புக்கும் எதிராக தமிழர் தேசம் போராட வேண்டும்.

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் கடந்த அரசவை அமர்வின் போது 'இந்தியப் பெருங்கடலும் இலங்கைத்தீவில் பெருகிவரும் சீன ஆதிக்கமும்' என்ற தொனிப்பொருளில் அறிஞர் பெருமக்கள் பலர் இது தொடர்பில் கருத்துக்களை முன்வைத்திருந்ததோடு, இது தொடர்பில் பிரதமர் வி. உருத்திரகுமாரன் அவர்கள் தாயக மக்களை நோக்கியும், தாயக அரசியல் தலைவர்களை நோக்கியும் அறைகூவர் விடுத்திருந்தார்.

தற்போது சீன நிறுவனத்தின் கடலட்டை விவகாரத்தில் தமிழர் தாயகத்தில் எழுந்துள்ள எதிர்வினைகள், இவ்வாறான அத்துமீறல்கள் தொடர்பில் விழிப்பு ஏற்பட்டு வருவதனை எடுத்துக்காட்டுகின்றது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.



# சிறீலங்கா அரச தகவல் இணையத்தில் அதிகளவு தமிழப் பிழைகள்

## திரு.க.வி. விக்னேஸ்வரன், எம்.பி. அறிக்கை – யூன் 22, 2021



கிராமசேவகர் பிரிவுகளை இணையம் வழியாக தொடர்பு கொள்வதற்காக அரசாங்க தகவல் நிலைய இணையம் வெளியிட்டுள்ள விபரங்களில் மிக மோசமான தமிழ் மொழிக் கொலை இடம்பெற்றுள்ளதாகவும் இதனைத் திருத்துவதற்கு அரசாங்கம் உடனடியாக நடடிவக்கை எடுக்க வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் வட மாகாண முதலமைச்சருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் மாவட்டங்கள், பிரதேசங்கள், கிராமங்கள் மற்றும் தென்னிலங்கையின் தமிழ்ப் பெயர்கள் முழுக்க முழுக்க எழுத்தப் பிழையுடன் வெளியிடப்படுள்ளமை பெரும் அதிப்தியையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் விக்கேஸ்வரன் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளார். அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

"அண்மையில், கிராமசேவகர் பிரிவுகளை இணையம் வழியாக தொடர்பு கொள்வதற்கான விபரங்களை அரசாங்க தகவல் நிலைய இணையம் வெளியிட்டுள்ளது. இதில் தமிழர்களின் மாவட்டங்கள், பிரதேசங்கள், கிராமங் கள் முழுக்க எழுத்துப் பிழையுடன் வெளியிடப்பட்டுள்ளமை எனக்கு பெரும் அதிருப்பதியையும் அதிர்ச்சியையும் தருகின்றது.

வட மாகாணத்தின் பெயர்கள் தவறாக எழுதப்பட்ட இடங்கள் சிலவற்றை சுட்டிக்காட்டலாம் என எண்ணுகிறேன். உதாரணமாக யாழ்ப்பாணத்தை யாழ்பாணம் என்றும் முல்லைத்தீவை முள்ளைத்தீவு என்றும் எழுதியுள்ளார்கள். அதேபோன்று துணுக்காய் என்பதை துணுக்கை என்றும் கூழா முறிப்பு என்பதை கோல முறிப்பு என்றும் முழங்காவில் என்பதை முலங்கவில் என்றும் இயக்கச்சியை ஐயக்கச்சி என்றும் பிழையாக எழுதியுள்ளார்கள். இங்கே நான் குறிப்பிட்டவை சில உதாரணங்களே. அரச தகவல் தொடர்பு நிலைய இணையத்தில் ஏனைய விபரங்களைப் பார்வையிடலாம். இவை அனைத்தும் உடனடியாக திருத்தப்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு நாட்டின் முக்கிய அரசாங்க அலுவலகத்தின் அறிவிப்பு வெளியீடு இத்தகைய தமிழ் பிழைகளுடன் வெளியிடப்படுவது என்பது சாதாரண விடயமல்ல. இதனைத் திருத்துவதற்கு சரியான வகையில் ஒரு தமிழ் அதிகாரியை அல்லது அலுவலரை குறித்த அலுவலகம் கொண்டிருக்கவில்லையா என்ற கேள்வியும் எனக்கு எழுகின்றது.

காலம் காலமாக தமிழ் மொழியைப் பிரயோகிப்பதில் அரச நிர்வாகம் கண்டுவரும் தோல்வியின் தொடர்ச்சியாகவும், தமிழ் மொழி மீதான மதிப்பற்ற தன்மையும் அலட்சியப் போக்காகவும் இது நடந்திருக்கின்றது என்பதை மாத்திரம் தெளிவாக உணர்ந்து கொள்ள முடிகின்றது. இவ்வாறு வடக்கு கிழக்கு மாகாணத்தின் பெயர்கள் மாத்திரமின்றி ஒட்டுமொத்த தமிழ் மக்களும் அவமதிப்பு செய்யப்பட்டுள்ளனர் என்றே இதனைக் கொள்ள வேண்டும்.

ஏற்கனவே, பேருந்துகளில் தமிழ்மொழி தூசன வார்த்தைகளாக எழுதப்பட்டதைக் கண்டு மிக வேதனை அடைந்தீருக்கிறேன். தென்னிலங்கையில் தான் இதனை அதிகமாக கண்டிருகக்கிறோம். அத்துடன் பல அரச திணைக்களகங்களில் கூட தமிழ்மொழி பிழையாக எழுதப்பட்டு இருப்பதை ஊடகங்கள் பலவும் சுட்டிக் காட்டியுள்ளன.

அதேபோன்று அரசு சுற்று நிருபங்கள் கூட தமிழ் மொழியில் வெளியிடப்படாமல் தனிச் சிங்களத்தில் வருவதனாலும் கூட இன்றுவரை தமிழ் மக்கள் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்பதையும் நினைவுபடுத்த விரும்புகிறேன். அத்துடன் மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள சில திணைக்களங்களுக்குச் சென்றால், மக்கள் தமிழில் உரையாடி தமது தேவைகளை நிவர்த்தி செய்ய முடியாத நியையும் காணப்படுகின்றது. தமிழுடன் தமிழர்களும் இங்கே புறக்கணிக்கப்பட்டுள்ளனர். மொழி என்பது ஓர் இனத்தின் அடையாளம். தமிழ் மொழி இரண்டாயிரம் வருடங்களுக்கு முந்தைய வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டது.

செம்மொழி என்ற அந்தஸ்தையும் பெற்றிருக்கிறது. இன்று தமிழ்மொழி இல்லாத நாடு இல்லை என்று சொல்லலாம். உலக நாடுகள் பலவற்றில் தமிழுக்கு மிக உயரிய மதிப்பு வழங்கப்படுகின்ற போது, தமிழ் மக்கள் பல ஆயிரம் வருட பூர்வீகத்தைக் கொண்ட தங்கள் நிலத்தில் சுதேசிகளான தமிழ் மக்களின் தமிழ் மொழி கொலை செய்யப்படுகின்றமை பெரும் மன உளைச்சலையும் வேதனையையும் தருகின்றது.

இந்த விடயத்தில் நான் அரசை மாத்திரம் குற்றம் சொல்ல மாட்டேன் டக்ளஸ் தேவானந்தா போன்றவர்கள் காலம் காலமாக அமைச்சராக இருந்து தமிழர்களுக்கு தொண்டு புரிவதாக சொல்லி வருகின்றனர். தமிழ் மக்களுக்கு அதிகாரத்தையோ அல்லது அபிவிருத்தியையோ கூட இவர்களினால் பெற்றுக்கொடுக்க முடியாது போனாலும் ஆகக்குறைந்தது தமிழ் மொழிக் கொலையையாவது தடுக்க முடியாத கையறு நிலையில் இருக்கிறார்கள்.

தனிச்சிங்களச் சட்டமும், தமிழ் மொழி மீதான புறக்கணிப்பும், மொழி அழிப்பும் இந்தத் தீவில் பாரிய விளைவுகளை உண்டுபண்ணிய பின்னரும் கூட தொடர்ந்தும் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டும் வருகின்றது என்பது கவனத்தில் கொள்ளப்படவேண்டும். ஆகவே, நான் மேலே சுட்டிக்காட்டியுள்ள விடயத்தில் அரசாங்க தகவல் நிலைய இணையம் தவறுகளை திருத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். மொழியை அழிப்பதும் இனவழிப்புத்தான் என்பதை மறந்து விடக்கூடாது என்பதையும் இவ்விடத்தில் நினைவுபடுத்திக் கொள்கிறேன்" என அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கும் செயற்பாடுகளை சீன அரசு செய்து வருகின்றது – சிறீதரன் எம்.பி



**யூன் 30, 2021**

கிளிநொச்சி கௌதாரிமுனை பகுதியில் அமைக்கப்பட்டு இருக்கும் சீனாவின் உடைய கடல் அட்டை பண்ணை பார்வையிடுவதற்கு இன்றைய தினம் பாராளுமன்ற உறிப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் விஜயமொன்றை மேற் கொண்டிருந்தார். அதன்போதே அவர் மேற்குறிப்பிட்டவாறு ஊடகங்களுக்கு கருந்து தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அன்மைய நாட்களில்



சா்வதேசரீதியாக பேசப்படும் ஓர் விடயமாக இலங்கை யினுடைய தென் பகுதியிலே சீனாவின் உடைய அகலக் கால்கள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது வடக்கு பகுதியில் குறிப்பாக நெடுந்தீவு, அனலைதீவு, நயினாதீவுகளில் ஆதிக்கத்தை செலுத்தியுள்ள நிலை யில் தற்பொழுது யாழ்ப்பாணம் அரியாலை பகுதியில் கடலட்டை குஞ்சுகளை வளர்ப்பதாக கூறி உருவாக் கப்பட்ட அட்டை பண்ணை ஆனது தற்போது கிளிநொச் சியல் மூலை எல்லையில் கௌதாரிமுனை என்னும் இடத்தில் எந்த அனுமதியும் இன்றி அந்த அட்டை பண்ணையை நடாத்தி வருகின்றார்கள்.



அத்துடன் யாழ் பாசையூர் மீனவர்கள் கிளிநொச்சி கௌதாரிமுனை மீனவர்கள் கடலட்டை வளர்ப்பிற்காக மன் வைத்த உாிமங் கள் மறுக்கப்பட்ட நிலையில் இப்பொழுது சீனர்கள் செய்து வருவதுடன் இற்கை யாகவே இக்கடலில் வளர்கின்ற கடல் அட்டைகளை நிராகரித்து செயற்கையாக பிரோய்லர் கோழிகளுக்கு வைக்கும் மருந்துகளை போல் கடலட்டைகளுக்கு வைத்து விரைவான வளர்ச்சியை அடைய வைத்து அதனை ஏற்றுமதி செய்யும் நடவடிக்கையில் சீனர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இவற்றினை சாதராணமாகப் பார்க்கும் போது சீனாவில் கடல் அட்டை ஏற்றுமதி செய்யும் இடமாகத்தான் தெரியும். ஆனால் இதன் பின் பாரிய அரசியல் செயற்பாடுகள் உள்ளன.

சீனா தற்பொழுது இலங்கையில் கால்பதித்துள்ள இடங்கள் அனைத்தும் முக்கிய கேந்திர நிலையங்கள் ஆகவே உள்ளன.

இவ்வாறான விடயம் ஈழத்தமிழர்களுக்கு மாத்திரம் அல்லாது அண்மையில் உள்ள இந்தியாவிற்கு கூட ஓர் பாரிய அச்சுறுத்தலை வழங்குகின்ற செயற்பாடாக காணப்படுகின்றது.

அத்துடன் இந்தியாவை வலிந்து சண்டைக்கு இழுக்கின்ற மற்றும் இந்தியாவை கண்கானிக்கின்ற செயற்பாடுகளை துரிதமாக சீனா அரசு மேற்கொண்டு வருகின்றது அதற்கு இலங்கை அரசு ஒத்துழைப்பினை வழங்குகின்றது என குறிப்பிட்டார்.




# வரலாற்றில் பதிவான மோசமான வெப்பநிலை 486 திடீர் சாவு



யூலை 01, 2021
கனடா மேற்கு பகுதியில் வழக்கத்துக்கு மாறாக கடும் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

கனடாவின் மேற்கு பகுதியிலும் மற்றும் அமெரிக்காவின் பசிபிக் வடமேற்கு பகுதியிலும் கடும் வெப்ப அலை தாக்கியுள்ளது. இதன் காரணமாக கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியாவில் வழகத்துக்கு மாறாக கடும் வெப்பநிலை பதிவாகியுள்ளது. பிரிட்டிஷ் கொலம்பியாவில் இருந்து 155 கல் தொலைவில் உள்ள லிட்டன் கிராமததில் அதிகபட்சமாக 121 டிகிரி பாரன்ஹீட் (49.5 டிகிரி செல்சியஸ்) வெப்பநிலை பதிவாகியுள்ளது.

காவல்துறையின் தகவலின் படி கடும் வெப்பநிலை காரணமாக வான்கூவர் பகுதியில் இதுவரை 486 பேர் உயிரிழந்திருக்கலாம் என கூறப்படுகிறது. வெப்ப நிலை உயர்வின் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை மட்டும் 65 பேர் திடீரென உயிரிழந்துள்ளனர் இதுபோன்ற வெப்பநிலையை நாங்கள் பார்த்தில்லை. என வான்கூவர் காவல்துறை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கனடாவில் இந்த சூற்றுச்சூழல் மாற்றம் காரணமாக, பிரிட்டிஷ் கொலம்பியா, ஆல்பெர்டா, சஸ்காட்செவன், மனிடோபா மற்றும் யூகோன் பகுதிகளில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# ஸ்காபரோ நிலக்கீழ் தொடரி வழத்தட நீட்டிப்பு



கனடிய வரலாற்றில் மிகப் பெரிய நிலக்கீழ் தொடரி வழித்தட விரிவாக்க கட்டுமானமான, மூன்று தொடரி நிலையங் களைக் கொண்ட ஸ்காபரோ தொடரி வழித்தட நீட்டிப்பினை ஒன்ராறியோ அரசாங்கம் அதிகாரபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளது. இப்புதிய நிழக்கீழ் வழித்தடமானது, ஸ்காபரோ மக்களுக்கு வேண்டிய சிறந்த போக்குவரத்து வசதியினை வழங்கும்.

இத்திட்டத்தின் மூலம், இதன் கட்டுமான காலத்தில் ஆண்டு தோறும் 3000 வரையான வேலைவாய்ப்புகளை வழங் குவதுடன், இது முடிவடைந்த பின்னர் ஸ்காபரோ பகுதியிலிருந்து நகரத்தின் பிற பகுதிகளுக்கு வேலைக்கும் பள்ளிகளுக்கும் செல்லோருக்கு இலகுவான போக்குவரத்தினையும் வழங்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி நிலக்கீழ் வழித்தடத்தின் விரிவாக்கப் பணிகளின் முதற்கட்டமாக கெனடி தொடரி நிலையத்திலிருந்து மக்கோவன் வீதி, ஷெப்பேட் வீதி சந்திப்பு வரையான 7.8 கிலோ மீட்டர் நீட்டிப்புக்கான கட்டுமானப் பணிகள் இடம் பெறும் சமிநலை ஒப்பந்த வேலைகளின்படி கட்டுமானப் பணிகள் இடம்பெறும்.

முதல்வர் போஃட் அவர்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போக்குவரத்துக் திட்டத்துக்கு கனடிய நடுவண் அரசு ஒப்புதல் அளித்ததுடன், ஒன்ராறியோ மாநிலத்தின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நான்கு நிலக்கீழ் வழித்தடத் திட்டங்களுக்கான செலவில் 40 சதவீதத்தினை அதிகபட்சமாக 10.7 மில்லியன் டொலர்களை வழங் குவதெனவும் ஒப்புக்கொண்டுள்ளது.



விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர் ஸ்காபரோ - றூஜ் பார்க்.

# கனடாவின் தேசிய கொடி அரைக் கம்பத்தில் பறக்க உத்தரவு



கனடிய தேசிய கொடியின அரைக் கம்பத்தில் ஏற்றுமாறு கனேடிய பிரதமர் திரு. ஜஸ்டின் ட்ரூடோ உத்தரவிட்டுள்ளர்.

ஒட்டாவாவில் அமைந்துள்ள பாராளுமன்றத்தின் அமைதிக் கோபுரம் உட்பட அனைத்து கூட்டாட்சி கட்டிடங்களிலும் கனடிய தேசிய கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்க விடுமாறு கனேடிய பிரதமர் திரு. ஜஸ்டின் ட்ரூடோர் உத்தரவிட்டுள்ளார்.

கனடாவில் தென் மேற்கு பகுதியில் அமைந்துள்ள பிரிட்டிஷ் கொலம்பியா பகுதியில் கடந்த வாரம் 215 சிறுவர்களின் உடல் எச்சங்கள் காம்ப்லூஸ் பள்ளி குடியிருப்பில் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து பழங்குடி சமூகத் தலைவர்கள் உட்பட பலரும் கனடா முழுவதும் கொடிகளைக் அரைக் கம்பத்தில் பறக்க உத்தரவு பிறப்பிக்குமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை



முன்வைத்தனர்.

இதை அடுத்து, அவர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாகவே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த உத்தரவினை 27.06.2021 அன்று கனேடிய பிரதமர் திரு. ஜஸ்டின் ட்ரூடோ இதனை அறிவித்தார்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் செயின்ட் யூஜின்ஸ் என்ற உறைவிட பள்ளி அருகே 182 பழங்குடி குழந்தைகளின் கல்லறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யூன் மாதம் இறுதி வாரத்தில் தகவல் வெளியாகியுள்ளது.



வதிவிடப் பாடசாலைகளில் உயிரிழந்த பிள்ளைகளுக்கு மதிப்பளிக்கும் முகமாக, கனடா சமாதானக் கோபுரத்தில் தேசியக் கொடி அரைக் கம்பத்தில் பறக்கவிடப்பட்ட வேண்டும் என்று கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடே கேட்டுக் கொண்டுள்ளார்.

# 2022 ஆம் ஆண்டின்

# உலக வணிகம்

விளம்பரம் ஓர் அன்பளிப்போ அலலது செலவோ அல்ல,அது ஓர் முதலீடு.

விளம்பரத்திற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் வீண் விரயமன்று அது உங்கள் வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு.

உங்கள் வணிகம் பெருகவும் முன்னேற்றமடையவும் இன்றியமையாதது.

விளம்பரம் இன்றேல்
வியாபாரம் இல்லை

விளம்பரத் தொடர்புகளுக்கு

**437 345 4203**





thamilarvanikam@gmail.com

# தமிழக செய்திகள்



## திருச்சி சிறப்பு முகாமில் இருந்தவர் சாவு சிறப்பு முகாமில் உள்ள ஈழத்தமிழர்கள் உடனே விடுதலை செய்க!

**தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசன் வேண்டுகோள்**




திருச்சி நடுவண் சிறையில் சிறப்பு முகாம் ஒன்றை உருவாக்கி அதில் ஈழத்தமிழர்கள் 78 பேரை அடைத்து வைத்துள்ளார்கள். நீதிமன்றங்கள் வழங்கிய தண்டனைக்காக அல்ல; ஈழத்தமிழராய்ப் பிறந்த "குற்றத்திற்காக"!

ஆம்! அப்படித்தான் சொல்ல வேண்டியுள்ளது. இந்த 78 பேரும் உரிய கடவுச்சீட்டு இல்லாமல் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்த குற்றத்திற் காகவோ அல்லது சிறு சிறு குற்றங்களுக்காகவோ தளைப்படுத்தப்பட்டு நீதிமன் றத்தால் தண்டிக்கப்பட்டு, தண்டனைக் காலத்தை முடித்தவர்கள். இவர்களில் பலர்க்குத் தமிழ்நாட்டில் குடும்பங்கள் இருக்கின்றன; உறவினர்கள் இருக் கின்றனர். அக்குடும்பங்களைச் சேர்ந்தோர் இந்திய அரசால் ஏதிலியராக (அகதிகளாக) ஏற்கப்பட்டவர்கள்.

சிறப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களை அக்குடும்பங்களிடம் தமிழ்நாடு அரசு ஒப்படைக்க வேண்டும். வெளிநாடுகளுக்குப் போக வாய்ப்புள்ளோரையும் அவர்கள் பொறுப்பில் அனுப்பி வைக்கலாம்.

**ஒருவர் இறந்துவிட்டார்**

மேற்கண்ட வகைகளில் தங்களை விடுவிக்க வேண்டும் கோரிக்கை வைத்து, திருச்சி நடுவண் சிறை சிறப்பு முகாமில் உள்ள ஈழத்தமிழர்கள் கடந்த 17 நாட்களாக முகாமிலேயே ஒன்றாக அமர்ந்து முழக்கமெழுப்பிக் காத்திருப்புப் போராட்டம் நடத்தி வருகிறார்கள் இவர்களில் இலங்கை அக்கரைப்பட்டு கிராமத்தைச் சேர்ந்த முகமது அலி என்பவர்க்கு உடல் நலக்குறைவு ஏற்பட்டு, திருச்சி மாவட்ட அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு, சிகிச்சைப் பலனின்றி 24.06.2021 அன்று இறந்து விட்டார் என்ற துயரச் செய்தி வெளியாகியுள்ளது.

அதுபோன்ற பெருந்துயர்கள் ஏற்படுவதற்கு முன் திருச்சி சிறப்பு முகாமில் உள்ள அனைத்து ஈழத்தமிழர்களையும் விடுதலை செய்துவிட வேண்டும் என முதலமைச்சர் அவர்களைத் தமிழ்த்தேசியம் பேரியக்கம் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

தலைமைச் செயலகம், தமிழ்த்தேசியம் பேரியக்கம்

## கோயில்களில் தமிழ் வழிபாடுக்குச் சட்டம் இயற்ற கோரி யூலை 03 இல் ஆர்ப்பாட்டம்



தஞ்சாவூரில் புதன்கிழமை செய்தியாளர்களிடம் பேசுகிறார் தெய்வத் தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர் பெ. மணியரசன்.

தஞ்சாவூர், யூன் 23:
கோயில்களில் தமிழ் வழிபாடு மற்றும் பூஜைக் குப் புதிய சட்டம் இயற்றக் கோரி, தமிழகம் முழுவதும் யூலை 03 ஆம் திகதி கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார் தெய்வத் தமிழ்ப் பேரவை ஒருங்கிணைப்பாளர் பெ. மணியரசன்.

தஞ்சாவூரில் செய்தியாளர்களிடம் புதன்கிழமை (24.06.2021) மாலை அவர் தெவித்தது. இந்து சமய அறநிலையத் துறைக் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்களில் கருவறை, வேள்விச்சாலை, கலசக்குடமுழுக்கு அனைத் திலும் தமிழ் மந்திரங்களைச் சொல்லி வழிபடுதல். பூஜை செய்தல் போன்றவை அன்றாட நடைமறையாக, இயல்பாகச் செயல்பட வேண்டும்.

விரம்பிக் கேட்பவர்களுக்கு மட்டுமே கருவறையில் சமஸ்கிருத மொழியில் வழிபாடும், அர்ச்சனையும் நடத்த வேண்டும். இதற்கான சட்ட விதிமுறைகளை உருவாக்கத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழ்வழிக் கருவறைப் பூசகர் அல்லது அச்சகர்களை உருவாக்கும் வகையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் பயிற்சிப் பள்ளிகள் அமைக்கப்பட வேண்டும். அதில், அர்ச்சகர் பயிற்சிப் பெற அனைத்துச் தமிழ்களுக்கும் வாய்ப்பு அளிக்க வேண்டும். ஏற்கெனவே பயிற்சி பெற்ற 200 அர்ச்சகர்கள் வேலையின்றி உள்ளனர். அவர்களுக்கு உடனடியாகத் திருக்கோயில்களில் தமிழக அரசுப் பணி வழங்க வேண்டும்.

இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகத்தைச் செயலூக்கம் மிக்கதாகவும். ஊழல் இல்லாததாகவும், அரசியல்வாதிகளின் சட்டவிரோத தலையீடுகள் இல்லாததாகவும் புத்தாக்கம் செய்ய வேண்டியது அவசரத்தேவை.

இத்துறையில் சீர்திருத்தங்களைச்செய்ய ஓய்வு பெற்ற நீதிபதி தலைமையில் ஆணையம் அமைத்து. பொது மக்களிடமிருந்து பரிந்துரைகளைப் பெற வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, தமிழகம் முழுவதும் யூலை 03 ஆம் திகதி கோரிக்கை முழக்க ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டவுள்ளது என்றார் மணியரசன்.

## தீருச்சி மத்திய சிறை சிறப்பு முகாமில் தமிழீழ தமிழர் உயிரிழப்பு!



திருச்சி மத்திய சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழீழ தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளர். இவர் தென் தமிழீழத்தை சேர்ந்த முகமது அலி என்பவரே உயிரிழந்துள்ளார்.

திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் குற்ற வழக்குகளில் தொடர் புடையதாக கைது செய்யப் பட்டுள்ள ஈழத் தமிழர்கள் உட்பட வெளிநாட்டினர் 100க் கும் மேற்பட்டோர் உள்ளனர்.

இவர்களில் தங்களை விடுதலை செய்யக் கோரி மன்னார் மீன வர்கள் 5 பேர் உட்பட ஈழத் தமிழர்கள் 78 பேர் கடந்த 09ஆம் திகதி முதல் 16 நாட் களாக தொடர்காத் திருப்பு போராட்டம் நடத்தி வருகின்றனர். தங்களை பொய் வழக்கில் கைது செய்துள்ளனர். அந்த வழக்கிலும் தண்டணைக் காலம் முடிந்தும் சிறையில் அடைத் துள்ளனர். பிணை கிடைத்தாலும் வேறு வழக்கில் கைது செய்து சிறையில் அடைக்கின்றனர்.

எனவே சட்டப்படி விடுதலை செய்ய வேண்டும். இல்லை யென்றால் கருணைக் கொலை செய்து விடுங்கள் என்றும் கோரிக்கை விடுத்து கடந்த மாதம் 24ஆம் திகதி ஒரு நாள் போராட்டம் நடத்தினர். ஒரு வாரத்தில் நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதியளித்தனர். ஆனாலும் விடுதலை செய்யவதற்காக நடவடிக்கை எடுக்காததால் கடந்த 9ஆம் திகதி முதல் காத்திருப்பு போராட்டத்தை தொடர்கின்றனர்.

போராட்டத்திலும் தமிழீழம் மட்டக்களப்பு பகுதியைச் சேர்ந்த முகமது அலியும் பங்கேற்றார். கடந்த 19ஆம் திகதி உடல் நலக்குறைவால் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில், முகமது அலி (52) சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்தார். இது கே. கே. நகர் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர். தென் தமிழீழத்தை சேர்ந்த முகமது அலி, மார்க்சிய சிந்தனையாளர், எழுத்தாளர், பல்வேறு புத்தகங்களையும் எழுதியுள்ளார். இலக்கிய ஆர்வம் உள்ளவர். தமிழீழத்தில் இருந்து சட்டவிரோதமாக தமிழ்நாடு வந்ததாக இராமநாதபுரத்தில் கைது செய்யப்பட்டார். வழக்கு முடிந்தும் 4 மாதங்களாக விடுவிக்கப்படாமல் இருந்ததாக சிறப்பு முகாம் வாசிகள் குற்றச்சாட்டியுள்ளனர்.

# தமிழக ஆளுநர் உரையில் தமிழீழத் தமிழர் குறித்த நிலைப்பாடு மாற்றப்பட்ட வேண்டும்! தமிழ் நாடு அரசிற்கு மே 17 இயக்கம் கோரிக்கை

இலங்கை குறித்த வெளியுறவுக் கொள்கையில் தமிழ்நாட்டின் முடிவுகள் முக்கியமானவையாகின்றன. வங்கதேசத்தின் மீதான வெளியுறவுக் கொள்கையில் மேற்கு வங்க மக்கள் ஆளுமை செலுத்துவதற்கு இணையாக தமிழ்நாடும் இலங்கை தொடர்பில் தமது நிலைப்பாடுகளை உறுதியாக வலியுறுத்தி நடைமுறைப்படுத்துவது அவசியமாகிறது என மே 17 இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் திரு. திருமுருகன் காந்தி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

தமிழ்நாட்டின் புதிய அரசின் சட்டமன்ற பொறுப்பேற்கும் முதல் அமர்வில் ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ள கர்நாடகா கேதாதுவில் கட்டப்போகும் அணையை தடுக்கும் முயற்சி செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கான தன்னாட்சி பாதுகாப்பு அரசு பள்ளிகளில் படித்தவர்களுக்கு அரசு வேலைகளில் முன்னுரிமை ஒன்றிய அரசு பணியிடங்களில் பொதுத்துறை நிறுவனங்களில் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்களுக்கு வேலையில் முன்னுரிமை, ஈழத்தமிழர்களுக்கான இந்தியக் குடியுரிமை ஆகிய ஒன்றிய அரசை வலியுறுத்தும் அறிவிப்புகள், வேளாண்மைக்கான தனி நிதிநிலை அறிக்கை 69 இட ஒதுக்கீட்டுக்கான பாதுகாப்பு உள்ளிட்ட முற்கோக்கு முயற்சிகளை மே பதினேழு இயக்கம் வரவேற்கிறது.

அதே நேரத்தில் ஆளுநரின் இந்த உரையில் தமிழீழத் தமிழர்கள் குறித்த 15-ஆம் குறிப்பு சொல்லுகின்ற 'ஈழத் தமிழர்களுக்கு சம குடிமைசார் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதி செய்திட சிறீலங்கா அரசை அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசு வலியுருத்தப்படும்' எனும் முடிவானது, 08.06.2011 ஆம் ஆண்டு சட்டமன்ற தீர்மானம் 27.03.2013 சட்டமன்ற தீர்மானங்கள் ஆகியவற்றிற்கு மாறானதாகவும் புறம்பானதாகவும் அமைந்துள்ளது.

மேலும் இந்த முடிவானது திராவிட முன்னேற்றக் கழகத்தின் 2019 தேர்தல் அறிக்கை 17-ம் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள "சிறீலங்கா வுக்கு எதிராக அமெரிக்க அரசால் கொண்டு வரப்பட்ட தீர்மானங்கள் இருமறை ஐ.நா. மனித உரிமை ஆணையத்தால் அண்மைக் காலத்தில் ஏற்கப்பட்டன. எனவே ஈழமண்ணில் அரங்கேற்றப்பட்ட போர்க்குற்றங்கள் இனப்படுகொலை மனித உரிமை மீறல்கள் அனைத்தின் மீதும் பாரபட்சமற்ற விசாரணையை உடனடியாக நடத்திட ஐ.நா. அமைப்புகளும், உலகநாடுகளும் ஏற்றுக்கொள்ளும் வகையில் உறுதியான நடவடிக்கைகளை இந்திய அரசு மேற்கொள்ள கழகம் தொடர்ந்து வலியுறுத்தும்".

"இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களில் வாழ்கின்ற தமிழர்கள் மற்றும் புலம் பெயர்ந்த தமிழர்களிடம் தமிழீழப் பிரச்சனைக்கு எவ்வித நிலையான அரசியல் தீர்வுகளை அவர்கள் விரும்புகிறார்கள் என்பதைக் கண்டறிய ஐ.நா. வின் நேரடி கண்காணிப்பில் பொதுவாக்கொடுப்பு நடத்த இந்திய அரசை திமுக வலியுறுத்தும்."

மற்றும் 2021 ஆம் ஆண்டு 16 வது சட்டப்பேரவைத் தேர்தல் அறிக்கையில் 'ஈழத்தமிழர் நல்வாழ்வு' தலைப்பின் கீழ் 13 வது வாக்குறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள "இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்கள் இனப்படுகொலை ஆகியவை குறித்துச் சுதந்திரமானதும் நம்பகத் தன்மை வாய்ந்ததுமான சர்வதேச விசாரணையை மேற்கொள்ள இந்திய அரசு உலக நாடுகளை வலியுறுத்திச் செயல்படுத்த வேண்டுமென மத்திய அரசைத் திமுக தொடர்ந்து வலியுறுத்தும்.

14வது வாக்குறுதியான "இலங்கையின் வழக்கு கிழக்கு மாகாணங்களில் முழுவதும் நீர்த்துப்போன அரசியல் அதிகாரப் பங்கீடுகளே அனுமதிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள தமிழர்களின் விருப்பத்திற்கேற்றவாறு நிரந்தரமான அரசியல் தீர்வு அமைய இலங்கையில் உள்ள தமிழர்கள் மற்றும் புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களிடையே ஐ.நா சபையின் மேற்பார்வையில் பொதுவாக்கெடுப்பு நடத்தவும் இலங்கையில் புதிதாக உருவாக உள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தில் முழுமையான அதிகாரங்கள் தமிழர்களுக்கு கிடைத்திடும் வகையில் சட்டப் பரிவுகளை உருவாக்கவும் சிறீலங்கா அரசை நிர்ப்பந்திக்க வேண்டுமென மத்திய அரசைத் திமுக தொடர்ந்து வலியுறுத்தும்."

என குறிப்பிடப்பட்டுள்ள வாக்குறுதிகளில் 'சிறீலங்கா அரசு ஒருபோதும் நிறைவேற்றவே செய்திடாத அதிகார பங்கீடு' பற்றி மட்டுமான ஒன்றிய அரசை வலியுறுத்தும் நிலைப்பாடானது ஆளநர் உரையினூடாக வெளிப் படுகிறது.

இந்த நிலைப்பாடு உங்களது வாக்குறுதியின்




கருப்பொருளான பொதுவாக்கெடுப்பு மற்றும் இனப்படுகொலை குற்றவாளிகள் மீதான சர்வதேச விசாரணையை வெளிப்படுத்துவதாக அமையவில்லை. இந்த கேரிக்கைகள் உள்ளடக்கப்படும் வகையில் மாற்றியமைக்கபட வேண்டுமென்பதை தங்கள் கவனத்திற்கு கொண்டு வருகின்றோம்.மேலும் தமிழீழத் தமிழர்கள் அதிகாரப்பகிர்விற்காக போராடவில்லை. மாறாக தமிழீழ தேசத்திற்காகவே போராடினார்கள் என்பதை கடந்த 40 ஆண்டுகால திமுகவின் மாநாடுகளின் தீர்மானங்களே வெளிப்படுத்தி இருக்கின்றன.

மற்றும் திமுகவின் ஒப்புதலோடு ஏகமனதாக கடந்த 2011 மற்றும் 2013 காலங்களில் தமிழ்நாட்டு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட "ஈழத்தமிழர்களுக்கான பொதுவாக்கொடுப்பு" "சிறீலங்கா அரசின் மீது சர்வதேச இனப்படுகொலைக்கான விசாரணை" "சிறீலங்கா அரசின் மீது பொருளாதாரத் தடை" என சிறீலங்கா அரசிற்கு எதிரான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்.

எனவே தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சார் அவர்கள் தமிழீழத் தமிழர்கள் தொடர்பான தமிழ்நாட்டின் (மேற்சொன்ன) நீண்ட நாள் கோரிக்கைகளை வலியுறுத்தி ஒன்றிய அரசின் கொள்கை மாற்றத்தினை சாததியமாக்கிட வேண்டும்.

நீண்ட அநீதிக்குள்ளான ஈழத்தமிழர்கள் இன்றளவும் இனப்படுகொலைக்கு உள்ளாகிறார்கள். இது சமயம் ஐரோப்பிய ஒன்றிய பாராளுமன்றம் சிறீலங்கா அரசிற்கு அளித்து வந்த GSP + (Generalised Scheme of Preferences) எனும் சலுகைகளை நிறுத்துவது தொடர்பாக முடிவெடுத்திருக்கிறது. இலங்கையில் ஈழத்தமிழர்கள் துன்புறுத்துவது தொடர்பாகவும் மனித உரிமைகள் மீறப்படுவது தொடர்பாகவும் தமிழர்களுக்கு நேரடியாக தொடர்பற்ற ஐரோப்பிய ஒன்றியமே இம்முடிவினை துணிந்த மேற்கொள்ளும் காலகட்டத்தில் தமிழர்களின் தாய்நிலமான தமிழ்நாடும் சிறீலங்கா அரசின் மீது நேர்மையான சமரசமற்ற முடிவுகளை இந்திய அளவில் கொண்டுவர போராட வேண்டும்.

இந்நிலை சாத்தியமாகவில்லையெனில் ஆளநர் உரையின் 34 வது குறிப்பான தமிழ்நாட்டு மீனவர்கள் பாதுகாப்பு வாழ்வுரிமை கைது செய்யப்படுதல் கச்சத்தீவு மீட்பு ஆகியவை கானல் நீராகும் என்பதை கடந்த கால வரலாற்று நமக்கு சுட்டிக்காட்டுகிறது. இலங்கை குறித்த வெளியுறவுக் கொள்கையில் தமிழ்நாட்டின் முடிவுகள் முக்கியமானவையாகின்றன.

வங்கதேசத்தின் மீதான வெளியுறவுக் கொள்கையில் மேற்கு வங்க மக்கள் ஆளமை செலுத்துவதற்கு இணையாக தமிழ்நாடும் இலங்கை தொடர்பில் தமது நிலைப்பாடுகளை உறுதியாக வலியுறுத்தி நடைமுறப்படுத்துவது அவசியமாகிறது. மேற்குவங்க மாநில மக்களின் பங்களிப்பினால் தங்களுக்கென தனிநாடு உருவாக்கிக் கொண்ட வங்கதேசம் இவ்வருடத்தில் 50 ஆம் ஆண்டு விடுதலை நாளை கொண்டாடுகிறது. தமிழ்நாடும் இவ்வாறாகவே தமிழீழம் குறித்த நிலைப்பாட்டின் மூலமாக சனநாயகரீதியில் வலிமையான மாநிலமாக இக்காலகட்டத்தில் மாற வேண்டுமென விரும்புகிறோம்.

எனவே, இந்நிலைப்பாடு தொடர்பாக உடனடியாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும் தமிழ்நாடு அரசும் தனது முடிவுகளை ஏற்கனவே மேற்கொண்ட கொள்கையின் அடிப்படையில் மாற்றியமைத்து நடவடிக்கை மேற்கொள்ள



வேண்டுமென மே பதினேழு இயக்கத்தின் சார்பாக கோரிக்கை வைக்கிறோம்.

மே பதினேழு இயக்கம்

# உலக செய்திகள்

## “கிறிக்கட் அல்ல – சிறீலங்கா சித்திரவதை”

### சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச ஆதரவு நாள் 26.யூன். 2021 – ITJP சூகா

ஜொகனஸ்பேர்க் - யூன் 26 2021

சிறீலங்கா போர் முடிவுக்கு வந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையிலும், தமிழர்கள் வெள்ளை வான்களில் கடத்தப்பட்டு, இரத்தக்கறை படிந்த சித்திரவதைக் கூடங்களில் விசாரணைகளுக்கு உட்படுத்தப்படுவது இன்னுமும் தொடர்கின்றது என சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச ஆதரவு நாள் நினைவாக யூன் 26 அன்று ITJP வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“மிளகாய்த்துள், பிளாஸ்டிக்பைகள், பெற்றோல், கட்டுமானக்குழாய்கள், தண்ணீர் பீப்பாய்கள், மின்சார வயர்கள், சிகரட்கள், முட்கம்பிகள், சூடான இரும்புக் கம்பிகள், கப்பிகள் என்பனவற்றுடன் சேர்த்து, கிறிக்கட் விக்கெட்டுக்களும் சித்திரவதை ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படுகின்றன” எனITJP இன் நிறைவேற்றுப் பணிப்பாளர் யஸ்மின் சூக்கா கூறினார். “சித்திரவதை நடக்கும் நாடுகளில் சிறீலங்கா முன்னிடத்தில் உள்ளதுடன், போர் முடிந்தபின்னர் சித்திரவதைக குள்ளாக்கப்பட்டவர்களில் ஆயிரத்திற்கும் அதிக மானவர்கள் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார்கள். இவர்களின் சிலர் 2020 நவம்பரில் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்” அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஸ்ச அரசாங்கத்தின் கீழ் செயற்படும் சிறீலங்கா பாதுகாப்புப் படைகளால் தமிழர்கள் கடத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட பல அண்மைய சம்பவங்களை ITJP விசாரணை செய்துள்ளது. பிரித்தானியாவுக்கு வரும் பாதிக்கப் பட்டவர்களின் பெருமளவானோர் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள், ஆனால் கோவிட் பெருந் தொற்றுக் காரணமாக அவர்களது வாக்குமூலங்களை ஆவணப்படுத்துவது தாமதமாகியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி கோத்தபாயவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ததும், காணாமற்போனவர்களின் குடும்பங்கள் நடாத்திய ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்டமையுமே தாம் கடத்தப்பட்டமைக்குக் காரண மென நேர்காணலுக்கு உள்ளாக்கப்பட்டவர்களில் அரைவாசிப்பேருக்குமேல் கருதுகின்றார்கள்.

“அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களிலும் இதர செயற்பாடுகளிலும் ஈடுபட்டவர்கள் வேறு யார்? இப்படியான செயற்பாடுகளைச் செய்வதற்கு காணாமற்போனவர்களின் குடும்பங்களுக்கு உதவியது யார்? என அரைகுறைத் தமிழில் அவர்கள் கேட்டார்கள்” என பாதிக்கப்பட்டவர்களில் ஒருவர் கூறினார்.




உள்ளாக்கப்பட்டு, சோசமான பாலியல் வல்லுறவுக்கு உட்படுத் தப்பட்டபோது அவருக்கு 19 வயதே ஆகியிருந்தது. பிரித்தானியா வந்தடைந்த பின்னர் பாதிக்கப் பட்டவர்களில் மூவர் தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளர்கள்.

சிறீலங்கா இராணுவமும் பயங்கரவாத முறியடிப்புப் பொலிசாருமே இதில் ஈடுபட்டுள்ளார்கள். உருமறைப்பு ஆடையில் வந்தவர்கள் பச்சைநிற இராணுவ வாகனம்




ஒன்றிற்குள் தள்ளிக் கடத்திச் சென்று, பின்னர் சித்திரவதைசெய்து, திரும்பத்திரும்பப் பாலியல் வன் புணர்வுக்கு ஆளாக்கினார்கள். இது தன்னைத் தற்கொலை செய்துகொள்ளத்தூண்டியது என பதின்ம வயதுத் தமிழர் ஒருவர் விபரித்தார். தான் தடுத்துவைக்கப் பட்டிருந்த இடத்தில் மூத்த இராணுவ அதிகாரி ஒருவர் இருந்ததாகவும் அவர் மேலும் விபரித்தார்:

“அவர்கள் என் கண்களைக் கட்டியிருந்த துணியை அகற்றினார்கள் நிலத்தில் முழங்காலில் மண்டியிட்ட நிலையில் நான் இருந்தேன். என்னை வீட்டிலிருந்து கடத்திச்சென்ற படைவீரரும், இன்னும் இருவரும் அங்கே இருந்தார்கள். அவர்களுடன் அதிகாரி போன்று தோற்றமளித்த இன்னொருவரும் எனக்கு முன்னால் இருந்தார். அவர் இராணுவ அதிகாரி போன்று இருந்தார் என்று நான் சொல்வதற்குக் காரணம் அவர் வெறும் பச்சைநிற இராணுவச் சீருடை அணிந்திருந்தார். அவருடைய மார்பில் சில பதக்கங்களும் அவருடைய தோள்ப்பட்டையில் சில நட்சத் திரங்களும் காணப்பட்டன”

2019 இன் இறுதிப்பகுதியில் இராணுவத்தால் சித்திரவதைக்குள்ளாகி, பாலியல் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு பிரித்தானியாவுக்குத் தப்பிவந்த இன்னொரு இளவயதுத் தமிழர் ஒரு வரும் தன்னை மூவர் கடத்தியதாகவும் ஒருவர் இராணவ சீருடையில் இருந்ததாகவும் கூறினார்:

“அவர்கள் என்னைப் பிடித்து இழுத்து, கை களை முதுகுக்குப் பின்னால் கட்டி, வான் ஒன்றுக்குள் தள்ளி, கண்களைத் துணியால் மூடிக் கட்டினார்கள்” என அவர் கூறினார்.

பயங்கரவாத விசாரணைப்பிரிவால் அண்மையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த ஒருவர் தான் தடுத்துவைக் கப்பட்டிருந்த இடத்தினை அடையாளம் காண்பித்தார். அத்துடன் காவல் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்து மீண்டும் மீண்டும் சித்திரவதைக்கு உள்ளாக் கப்பட்ட கட்டடத்தையும் அடையாளப் படுத்தினார்.

“அவர் என்னுடைய முதுகிலும் கீழ்க்காலிலும் உலோகக் கம்பியால் சூடுவைத்தார். அவர் கையுறைகள் அணிந்திருந்தார். அவர் எங்கிருந்து அவ் உலோகக் கம்பியைக் கொண்டு வந்தார் என்பதையோ, எவ்வாறு அதனைச் சூடாக்கினார் என்பதையோ நான் காணவில்லை. நான் வலியில் கத்தினேன். காயங்களின் எரிவு பல வாரங்களுக்கு இருந்தது” இவ்வாறு சித்திரவதைகளிலிருந்து தப்பிவந்த ஒருவர் கூறினார். மேலும் தன்னை கைகளையும் கால்களையும் ஊன்றியவாறு மண்டியிடவைத்த பயங்கரவாத முறியடிப்புப் பிரிவுப் பொலிசார் மலவாசல் வழியாக உலோகக் கம்பியைச் செலுத்தியதாகவும் கூறினார்.

“கிறிக்கெட் விளையாட்டுக்கு எந்தளவுக்கு சிறீலங்கா பிரபலமானதோ, அந்தளவுக்கு சித்திரவதைக்கும் அந்தநாடு பிரபல்யமானது. பல தசாப்தங்களாகத் திட்டமிட்டுத் தொடரும் சித்திரவதை, துஸ்பிரயோகங்களை முழுநாடும் ஏற்றுக்கொண்டு, பாதுகாப்புப் படைகளுக்கு ஆதரவளிப்பதை நிறுத்தவேண்டிய நேரம் இது. இது பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதிகிடைக்கவேண்டிய நேரம்” இவ்வாறு சூக்கா தெரிவித்தார்.

## சிறீலங்கா – திஸ்ஸமஹாராமையில் சீன இராணுவத்தின் சீரடையுடன் தொழிலாளர்கள்

சிறீலங்கா திஸ்லமஹாராமையில் சீன இராணுவத் தினரின் சீருடை போன்ற ஆடையணிந்த தொழிலாளர்கள் காணப்பட்டமை குறித்து சிறீலங்கா நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளது.



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார இதனை சுட்டிக்காட்டினார். சிறீலங்கா திஸ்ஸமஹாராமையில் தொழிற்சாலை யொன்றில் பணிபுரியும் தொழிலாளர்கள் சீன இராணுவத் தினரின் சீருடை உடையுடன் காணப்படுகின்றனர்.

## அமெரிக்காவில் அடுக்குமாடிக் குடியிருப்பு இடிந்து விழுந்து: 100க்கும் மேல் பலி



அமெரிக்காவின் பளோரிடா மாகாணத்தில் மியாமி கடற்கரை அருகே 12 மாடிகளைக் கொண்ட குடியிருப்பு வளாகம் இடிந்து விழுந்ததில் 100க்கும் மேற் பட்டோர் உயிரிழந்துள்ளதாக முதற்கட்ட தகவர்கள் தெரிவிக் கின்றன. அந்தக்கோர அனர்த் தத்தில் மேலும் பலர் இடிபாடு களில் சிக்கியுள்ளதால் மீட்புப் பணிகள் துரிதப்படுத் தப்பட்டுள்ளன.

யூன் 25, 2021

## 22 ஆண்டுகள் 6 மாதங்கள் சிறை

காவல்துறை அதிகாரி டெரிக் சாவின் குற்றவாளி என நிரூபணம் செய்யப்பட்டுள்ளது. டெரிக் சாவினுக்கு 22 ஆண்டுகள் 6 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்தள்ளது.

மெரிக்காவின் மினசோட்டா மாகணத்தின் மனியா போலீஸ் நகரைச் சேர்ந்தவர் ஆபிரிக்க அமெரிக்கரான ஜோர்ஜ் பிளாய்ட் லாலி டிரைவரான இவர் கடந்த ஆண்டு மே மாதம் 25ஆம் திகதி மனியா போலீஸ் நகரிலுள்ள ஒரு கடைக்குச் சென்று பொருட்களை வாங்கினார்.

அப்போது அவர் வழங்கிய பணத்தில் 20 வெள்ளி தாள் கள்ள காசு இரந்ததாக கடையின் ஊழியர் காவல்துறைக்கு தகவல் கொடுத்ததர். அதன்பேரி காவல் அதிகாரி டெரிக் சாவின் தலைமையில் 4 காவல்துறையினர் அங்கு விரைந்தனர். பின்னர் அவர்கள் முறைப்பாடு தொடர்பாக விசாரிக்க அழைத்தபோது காவல் அதிகாரி டெரிக் சாவின் ஜோர்ஜ் பிளாய்டை தரையில் கிடத்தி அவர் கழுத்தை முழங்கால் முட்டியால் அழுத்தினார். என்னால் மூச்சுவிட முடியவில்லை எழுந் திருங்கள் என ஜோர்ஜ் பிளாய்ட் கெஞ்சிய போதும் விடவில்லை. சிறது நேரத்தில் ஜோர் ஜ் பிளாய்ட் உயிரிழந் ததர்.



இந்தநிலையில், இந்த வழக்கு விசாரணையின் முடிவில் டெரிக் சாவின் குற்றவாளி என நிரூபணம் செய்யப்பட்டது.

# இந்தியாவின் தேச நிர்மாணிகளில் ஒருவரான நேதாயி சுபாஸ் சந்திர போஸ் அவர்களினதும் இந்திய சுதந்திரப் போராளிகளினதும் வழியினைப் பின்பற்றி...!



தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகன் அவர்கள் இந்தியாவின் தேச நிர்மாணிகளில் ஒருவரான நேதாயி சுபாஸ் சந்திர போஸ் அவர்களினதும் இந்திய சுதந்திரப் போராளிகளினதும் வழியினைப் பின்பற்றித் தனது விடுதலைப் போராட்டத்தைக் செயல் நெறிப்படுத்த முனைந்த தலைவர்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் தமிழீழத்தின் விடுதலைக்காக ஆயத வழியில் விடுதலைப் பேராட்டத்தை ஆரம்பித்து மாபெரும் மக்கள் பலத்துடன் தமிழீழ நிழல் அரசை உருவாக்கி ஆண்ட தன்னிகர் அற்ற தமிழர் வரலாற்றின் பெருந்தலைவர்.

கடந்த நூறு ஆண்டுகளில் ஆயுதவழியில் எதிரியை வெற்றிகொண்டு தமிழர்களைக் காத்துநின்ற தலைவர் என்றவரிசையில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களுக்கு நிகராக பிறிதொரு தமிழர் இருக்கவில்லை என்பதே யதார்த்தம்.

இத்தகைய தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்களை தமிழீழத்தில் செயலாற்றிய சேர். போன். அருணாச்சலம், சேர். போன். இராமநாதன், ஜீ.ஜீ. பொன்னம்பலம், தந்தை செல்வநாயகம், அல்லது ஞானோதயம் சம்பந்தர் ஆகியோரோடு ஒப்பிடுவது அரசியல் அறிவீனம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்கள் ஆயுத வழியில் விடுதலைக் கப் போராடிய ஒருவர் ஏனையவர்கள் அனைவரும் ஆயுதவழி தழுவாத கட்சி அரசியலின் தன்மை கொண்டு தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்கப் போராடிய தமிழீழ மக்களின் ஏகோபித்த தலைவர்கள்.

கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாகத் தமிழீழத்தில் உள்ள தமிழீழத் தமிழர்கள் ஞானோதயம் சம்பந்தர் ஐயா அவர்களையே தமது தலைவராக அடையாளப் படுத்தியுள்ளனர் என்பதை உண்மையான யதார்த்த வரலாறு.

ஞானோதயம் சம்பந்தர் ஐயா அவர்கள், தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் போன்று போராடவில்லை என்பது அரசியல் முட்டாள்தனம். அதுபோலவே தமிழ்நாட்டில் உள்ள எந்தத் தலைவருடனும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் செயற்பாடுகளை ஒப்பிட முடியாது என்பதுடன் அவ்வாறு எவராவது ஒப்பிட்டாள் அது அவர்களின் அறியாமையே.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் என்பவர் தமிழர்களின் வரலாற்றில் அனைவருக்கும் பொதுவானவர். ஏன் பல உலக விடுதலைச் சிந்தனையாளர்கள் அவரை சமகாலத்தின் உலக விடுதலை முன்னோடியாக்க விரும்புகின்றனர். எது உவ்வாறு இருப்பினும் எமது தமிழர் வரலாற்றில் முருகனைப் போன்று சேர, சோழ, பாண்டியர்களை போன்று எல்லாளன், பண்டார வன்னியன், மருது சகோதரர்களைப் போன்று அனைத்துத் தமிழருக்கும், அனைத்துக் கட்சியினருக்கும் பொதுவானவர்.

திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதா, இந்தியக் காங்கிரஸ் கட்சி என அனைத்துக் கட்சிகளுமே தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர் களினால் பெரிதும் மதிக்கப்பட்ட கட்சிகள் ஆகும். தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் தமிழீழத்திலோ தமிழகத்திலோ இந்தியாவிலோ எவருடனாவது முரண்பட்டிருந்தால் அது உள் முரண்பாடே அன்றிப் பகை முரண்பாடல்ல.



இந்தியாவுடன் ஏற்பட்ட முரண்பாடும், போரும் மீண்டும் ஒரு முறை ஏற்படக்கூடாது என்பதில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் மிகவும் உறுதியாகவிருந்தார். இந்தியாவுடன் ஒன்றித்துச் செயலாற்ற விரும்பிய அவர், தன் விருப்பினை பலமுறை வெளிப்படையாகவே தெரிவித்திருந்தார்.

திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், பாரதிய ஜனதா, இந்தியக் காங்கிரஸ் கட்சி என எந்தவொரு கட்சியினரையும் இல்லது செய்ய வேண்டும் என்ற நோக்கம் கொண்டவர் அல்ல தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் என்பதனை அனைவரும் விளங்கிக கொள்ளுங்கள்.

எம். ஜீ. ஆர் அல்லது கலைஞர் என்ற இரு துருவ அரசியற் களத்தில் போராட ஆரம்பித்த தமிழீழத் தேசியத் தலைவர் எம்.ஜீ.ஆர் அவர்களின் அதிக பற்றுதலுக்கு உள் ளாகியிருந்த போதும், மாபெரும் தலைவர் கலைஞர் கருணாநிதி அவர்களும் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களும் மிகுந்த புரிதலுடன் செயலாற்றியவர்கள் என்பதே உண்மை.

எனவே இடையில் வந்து குழப்புவார்கள் கதைகளைக் கேட்டுக்கோபம் கொள்ள வேண்டாம் தலைவர் கலைஞரா







**இந்தியாவின் தேச**

அல்லது தமிழீழத் தேசியத் தலைவரா என்ற விவாதத்தில் இருந்து விலகிக் கொள்வதே தமிழ்த் தேசியத்தின் பலமாகவும் தளபதி இஸ்ராலின் அவர்களின் தமிழ்த் தலைமைக்கும் அவரின் கீழ்த் தமிழர்கள் அனைவரும் அணிவகுப்பதற்கும் சிறப்பாக அமையும் என நம்புகிறேன்.

மேலும் சீனாவின் ஆக்கிரமிப்பில் இருந்து இந்தியாவைப் பாதுகாக்க வேண்டிய நேரம் இது. எனவே தமிழ் மீதும், தமிழ் தேசியத்தின் மீதும், திராவிடத்தின் தேசியத்தின் மீதும், இந்தியாவின் மீதும், இந்தியத் தேசியத்தின் மீதும் பற்றுக்கொண்ட நாம் அனைவரும் ஒன்றுபட்டுச் செய லாற்ற வேண்டிய காலமிது.

உள் முரண்களைக் களைவோம் ஒன்றுபட்டு உழைப் போம்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் பெயரை இந்தியாவின் எந்த ஒரு தலைவருக்கு எதிராகவோ அல்லது ஒப்பீடு செய்யும் விதத்திலோ வாதப்பிரதிவாதம் செய்வது அரசியல் வங்கு ரோத்துத்தனம்.

எனவே தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்களின் பெருமைகளைக் கூற விரும்புவோர் அவரது பெருமைகளைக் கூறுங்கள் பிறிதொருவருடன் ஒப்பிடுவதை நிறுத்திக்கொள்வதே நீங்கள் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப் பிள்ளை பிரபாகரன் அவர்களின் மீது கொண்டிருக்கும் உண்மையான உணர்வுமிக்கப் பற்றுதலாகும்.

**குறிப்பு:** புலம் பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களுக்கு ஒரு கண்டிப்பான வேண்டுகோள் நீங்கள் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களின் கொள்கைகளைப் பின்பற்றுபவராக இருந்தால் தமிழ்நாட்டு அரசியலுக்குள் கருத்துச் சொல்ல முயலாதீர்கள்.

எல்லோரையும் மதிப்புடன் பாருங்கள். தமிழ்த் தேசியச் சிந்தனை, திராவிடத் தேசியச் சிந்தனை மற்றும் இந்தியத் தேசியச் சிந்தனை என்பவற்றினை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பது தமிழகத் தலைவர்களுக்கும் அங் குள்ள மக்களுக்கும் நன்கு தெரியும்.

நீங்கள் அவர்களுக்கு ஆதரவாகச் செயலறுவது என்ற பெயரில் அங்கு உள்ள தலைவர்கள் மீதும், அமைப்புக்கள் மீதும் குறை கூறுவதை, அவதூறு பரப்புவதை நிறுத்திக் கொள்ளுங்கள்.

இவ்வாறு செய்யும் பலர் சிறீலங்காப் புலனாய்வு படை களின் கைக் கூலிகளாக இருப்பர்களே என்பதனை தமிழக மக்களுக்கும் தமிழகத் தலைவர்களுக்கும் மிகுந்த மன வேதனையுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இவ்வாறானவர்களை புலம்பெயர்ந்த தமிழீழ அமைப் புக்கள் சில தங்களின் பிரதிநிதிகள வைத்திருக்கின்றது மிகுந்த வேதனை அளிக்கின்றது. துரோகிகள் எம்முடன் ஊடுருவி உள்ளனர் எம்மைவிட அதிக தேசியம் பேசுகின்றனர்.

விழிப்புடன் இருப்போம் துரோகிகளைத் தூக்கி எறிவோம்.




சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும் அனைத்து மங்கள வைபவங்களையும் ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
Email: aarthanan@hotmail.com
aarthananyathu@hotmail.com



கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy



DSC DEBT SOLUTION CANADA
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4

Suren Sornalingam
Certified Insolvency Counsellor
Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

# நெருப்பு மனிதர்கள்

யூலை 05, கரும்புலிகள் நாள் 1987 ஆம் ஆண்டு இன்றைய தினத்தில் தான் தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புலிகள் என்னும் போர் வடிவம் அறிமுகம் செய்யப்பட்டது. இத்தினத்தில் தான் “ஒப்பரேசன் லிபரெசன்“ நடவடிக்கைக்கு எதிராக முதல் கரும்புலி கப்டன் மில்லரினால் நெல்லியடியில் தாக்குதல் மேற்கொள் ளப்பட்டது.

அன்று வெளிப்படுத்தப்பட்ட இப் போர் வடிவம், தமிழீழ விடுதலைப்போராட்ட வரலாற்றில் இலட்சியப்பற்று, அர்ப்பணிப்பு, மனோபலம் என்பன வற்றிற்கு அடையாளமாக இன்றுவரை உள்ளது. இப்போர்வடிவம் இலங்கையின் அரசியல் வரலாற்றிலும், தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் திருப்பு முனைகளுக்கும் நகர்வுகளுக்கம் காலத்திற்குக் காலம் அடித்தளமாகவே இருந்துள்ளது எனின் அது மிகையானதல்ல.

அத்தோடு மட்டுமல்ல இன்றைய நிலையில் தரையிலும், கடலிலும் சிறீலங்கா ஆயதப் படையையும், சிங்கள அரசையும் கதிகலங் கச்செய்யும் ஓர் அம்சமாக அது உள்ளது. இதேசமயம் சிறீலங்கா இராணுவத்தினருடன் விடுதலைப்புலிகளுக்குள்ள ஆளயி மற்றும் ஆயுத தளபாடச் சமநிலை அன்மையைச் சீர்செய்யும் ஓர் வடிவமாகவும் இக்கரும் புலிகள் உள்ளனர் எனலாம். அதாவது இராணுவ ரீதியிலான சமநிலைக்கு இக் கரும் புலிகளின் பங்குமிக உயர்வானதாகும்.

விடுதலைப் புலிகள் அமைப்பைச்சேரந்த போராளிகள் அனைவரும் அர்பப்ணிப்பு மிக்கவர்கள் தான் இதனை உலகம் நன்கே அறியும். விடுதலைப் புலிகளின் இலட் சியப்பற்று, உறுதி, அர்ப்பணிப்பு என்பனபற்றி எதிர்த்தரப்பினரே ஆச்சரியப் படுவதுண்டு இவ்வாறு இருந்தும் கூட கரும்புலிகள் இவர்களில் இருந்து வேறு பட்டவர்களாக உள்ளனர். இதற்கு இவர்களின் வேறுபட் டவகையான ஈகமே காரணம் எனலாம்.

கரும்புலிகளின் செயல்கள், அர்ப்பணிப்புக்கள் சாதாரண மனிதர் ஒருவரினால் எண்ணிப்பாக்கக்கூட முடியாதது. ஏனெனில், தனிமனித அபிலாசைகள் அதற்கு இடமளிக்க மாட்டாது. அத்தோடு, கரும்புலிகள் ஆவதற்கு தனியான மனித அபிலாசைகளைத் துறந்தால் மட்டும் போதாது சாவுக்கு விஞ்சிய மனோ பலமும் இதற்கு அவசியமானதானும். அத்தோடு, நுட்பமான போரியல் ஆற்றலும் அவசியமானதாகும். ஏனெனில், சாவை மறந்து தனது குறிக்கோளை அடைய முனையும் ஒரு செயல் வீரனின் நடவடிக்கை இது ஆகம்.

**தமிழீழ மக்களுக்கு முகம் தெரியாத ஒரு கரும்புலி வீரனின் மடல்**

அன்பான மக்களே!

வெற்றி பெற்று வாழ போருக்குத் தயாரா குங்கள் நம்பிக்கையுடன் வெடிக்கின்றேன்.

அன்புக்கினிய எம் தாய்நாட்டு உறவுகளே வணக்கம்!

எங்கள் மக்களின் துன்பம் கண்டு துவண்டு கரும்புலியான எனது உணர்வுகளை உங் களுடன் பகிர்ந்துகொள்ள ஆசைப்படுகின றேன். அன்பானவர்களே! உங்களின் வாழ்விற்காக, இருப்பிற்காக எனது உயிரைக்



கொடையாகக் கொடுப்பதில் நான் மகிழ்ச் சியடைகின்றேன். எமது இனத்தைச் சிங்கள தேசம் அழிக்கத் துடிப்பதை நினைக்கும் போதுதான் இன்னும், இன்னும் பல பிற் பபெடுத்து எமது இனத்தின் விழிவிற்காக கரும்புலியாகப் போகத் துடிக்கின்றேன்.

அன்பான எமது மக்களே!

நாம் சுதந்திரம் பெற்றே தீரவேண்டும் என்பதை இப்போது சிங்களவன் செய்யும் கொடுமைகளிலிருந்து புரிந்து கொள்ள முடிகின்றதல்வா? எங்களின் உறவுகளும், எங்களின் சொத்துக்களும் எங்கள் கண் முன்னாலேயே சிங்களவனால் அழிக்கப் படுவதைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமா? சமாதானம் பேசி அரசியல்தீர்வு தருவதாக நாடகம் ஆடி இப்போது அடிமையிலும் அடிமையாக்கி எமது இனத்தை அழிக்கத் துடிக்கின்றான் மகிந்தர் கூட்டம்.

இதனைச் சும்மா விடுவதா? இத்தனை ஆண்டு காலம் இரத்தம் சிந்தி, உயரி விலைகொடுத்து போராடிய எம் தோழர்கள் காத்த தேசத்தை அழியவிடுவதா? ஒன்று மறியா பாலகரையும், அப்பாவிகளையும் கொல்லும் சிங்ளவனைச் சும்மா விடுவதா? கொலைக்கு மேல் கொலை செய்து எமது இனத்தை அடிமைகளாக்க நினைக்கும் சிங்களவனை நாம் சும்மா விடுவதா? சிந்தித்துப் பாருங்கள்.

வீதிக்கு, வீதி நாய்களைப்போல் சிங்களவன் ஏவும் செல்லுக்கு செத்துமடிகிறோமே? ஏன் தமிழினமே? குட்டை நாளையையும் வீட்டிற்குள் பூட்டி அடித்தல் திருப்பிக் கடிக் கவரும். ஆகவே, புலியினத்தை சுற்றிவளைத் துத் தாக்க நாம் சும்மா விடுவதா?

அன்பானவர்களே ஹிட்லர் எப்படி யூத இனத்தை அழித்தான் என்பது தெரியும் தானே? அதுதான் இன்று எம் கண்முன் நடக்கின்றது. மக்கள் அதிகம் வாழும் இடங்களை வண்டு மூலம் படம் எடுத்து அந்த இடங்கள் மீது செல்லடித்து மக்களை தொகை தொகையாக, குடும்பம் குடும்பமாக கொன் றொழித்து மகிழ்கின்றான் சிங்களவன். இன்னுமா எமக்கு ரோசம் வரவில்லை? இப்படியே அவன் அழிக்க, அழிக்க நாம் தொலைந்து போக வேண்டுமா?

சிந்தியுங்கள் மக்களே!

எனது அன்பான அண்ணன் மாரே, தம்பிமாரே, எங்கள் அக்காமாரே, தங்கை மாரே வேறுவொருவர் திரும்பிப்பார்த்தலே நெருப்பாகிவிடுவதுதான் எங்கள் பழக்கம். நாளை சிங்களவன் எம் தேசத்திற்குள் புகுந்து அன்பிற்குரிய அக்காவையும், பாசத்திற்குரிய தங்கையையும் சிதைக்கும்போது எம்மால் என்ன செய்ய முடியும்? சாவு என்றோ ஒரு நாள் எமக்குச் சொந்தமானதுதான். வேண் டுமானால், இன்றே வரட்டும். இதன் மூலம் எமது இனம் விடுதலை பெறட்டும்.

எமது அக்காவும், தங்கையும் நிம்மதியாக வாழட்டும். அக்கா, தங்கை சிதைக்கப்படும் போது ஐயோ நான் கரும்புலியாய் போயாவது எனது அக்காவைக் காப்பாற்றியிருக்கலாம் என வேதனைப் படுவீர்கள். எனவே, நீங்கள் முடிவெடுங்கள் உங்கள் அக்காவிற்கு மட்டுமல்ல, எமது இனத்திற்கு நடக்கப்போவது இதுதான். இதிலிருந்து விடுதலை பெற அமைதியாக சிந்தித்து ஆழமான முடிவை எடுங்கள்.
அன்பான அக்காமாரே, தங்கைமாரே இன்று நீங்கள் முடிவெடுங்கள்!

முடிவெடுக்கத்தவறினால், நாளை வாழ் விழந்து, வாழ்க்கை வெறுத்து தற்கொலை நிலைதான் வரும், கடைசி மட்டும் பார்ப்போம் என்றிருந்துவிடாதீர்கள். அது உங்கள் வாழ்க் கையில் கடைசியாக இருந்துவிடும். வெள்ளம் வரும் முன் அணை கட்டுவதுதான் புத்திசாலித் தனம். குண்டுச் சத்தத்திற்குப் பயந்து போர் செய்யாமல் இருந்து நாளை வேதனைப் படப்போகின்றிர்களா? அல்லது இன்றே செய்யப்போகின்றீர்களா?

சிறீலங்கா இராணுவ பூதம் என்ன செய்யப் போகின்றதென்று உங்களுக்குத் தெரியும். அக்காமாரே, தங்கைமாரே வெடிமருந்தைக் கட்டியணைத்து முத்தமிடும் நான் உங்களிடம் பேசுகின்றேன். நாளை வெடிக்கும்வரை எமது விபரங்கள் மௌனமாகவே இருக்கும். அதன்பின் என் உணர்வுகள் உங்களைத் தாக்கும். என்னைக் கரும்புலியாக்கிய பெருமை சிங்களவன் மகிந்தவிற்கே சாரும். எனக்கும் வாழவேண்டும் என்ற ஆவல் உண்டு. ஆனால், இந்தக் கொடுமைகளை யெல்லாம் பார்த்துக்கொண்டு இதற்கு ஒரு முடிவுகட்டாமல் எப்படி வாழமுடியும்?

எமது அன்பான அம்மாமாரே, அப்பாமாரே இன்றுள்ள நெருக்கடிக்கு விரைவாக முடிவெடுக்கவேண்டும். உங்கள் பிள்ளை களை நீங்கள் உங்களிடம் வைத்திருப்பதால் பாதுகாக்கமாட்டீர்கள். மாறாக, உங்கள் கண்முன் சிங்களக் காடையார்களால் கொடுமைப்படுத்தப்படுவதைத்தான் பார்க்கப் போகின்றீர்கள். உங்கள் பிள்ளைகள் களத்திற்குச் சென்றால் இறந்து விடுவார்கள் என்று எண்ணாதீர்கள். அவர்களின் வீரத்தால் நீங்களும், உங்கள் உறவுகளும், பிள்ளைகளும், பச்சைப் பாலகர்களும் மகிழ்வார்கள். நான் அரசியல் பேசுபவன்

# நெருப்பு மனிதர்கள்

அல்ல. நான் ஒரு கரும்புலி, எமது அம்மா என்னை நினைத்து எங்கே எனது பிள்ளை, எங்கே செல்கின்றானோ என வேதனைப் படுவது எனக்குத் தெரியும். ஆனால், எனது தங்கை, அக்கா, அண்ணன் குடும்பம், மாமா குடும்பம் எனது உறவுகள் நிம்மதியாக வாழ வழிதேடிய நான் கரும்புலியானேன்.

எனது அம்மாவிற்கு அன்பு மடலில் எல்லாவற் றையும் எழுதியுள்ளேன். அவர் புரிந்து கொள்வர். என் வரலாற்றை அவரே எடுத்துச் சொல்வார் எனப்து மட்டும் உறுதி. அன்பான இளைஞர்களே, யுவதிகளே இன்று நிங்கள் அனைவரும் உங்கள் சுயநலனைவிட்டு தலைவன் வழியில் இணையுங்கள். எம்மில் சிலர் இறந்தாலும் எமது இனம் நிம்மதியாக வாழவழி கிடைக்கும்.

அம்மாமாரே, உங்கள் பிள்ளைகளை எதிரியால் கொடுமைப்படுத்தப்படுவதை, கொல்லப்படுவதைப் பார்க்கப் போகின்றீர்களா? அல்லது விடுதலைக்காகப் போராட அனுப்பப் போகின்றீர்களா? இதனை நான் இங்கிருந்து பார்க்கமாட்டேன். மூத்த தளபதி கிட்டு அண்ணையுடன் வானத்திலிருந்து பார்ப் பேன். அன்பான உறவுகளே எமக்கான நாள் நெருகுகின்றது. ஆனால், மக்கள் பல இடப் பெயர்வுகளையும், துயரங்களையும் சந்திக் கின்றார்களே தவிர இந்த நிலைக்கு தள்ளிய எதிரியை நோக்கிப் போர் செய்யத்தயாராக இல்லை என்பதை நினைத்தே நான் வேதனைப்படுகின்றேன்.

அன்பான பெரியவர்களே, சான்றோர்களே, மூத்தவர்களே நாம் விடுதலை பெறுவதற்கு உங்கள் பங்களிப்பே மகி முக்கியமானது. எமது போராட்டத்தில் பல்வேறு வடிவங்களை எமது போராளிகள் சந்தித்துள்ளனர். இதற்கு எல்லாம் அண்ணன் திலீபன் செய்த தியாகமே மேலானது. அவர் சொன்னார், மக்கள் புரட்சி வெடிக்கும். அப்போதுதான் உண்மையான சுதந்திரம் கிடைக்குமென்று. அதுமிக முக்கியமானது. உண்மையானது. வியட்னாமில் மக்கள் எப்படிப் போராடினார்கள். தெரியும் தானே. எனவே, பெரியவர்களாகிய நீங்கள் முன்னுக்கு வாருங்கள். ஆசிரியர்கள், பெரியவர்கள் தலைமையில் ஒன்றுகூடுங்கள். மக்களுக்குள் சென்று போராடவலுவுள்ள அனைவரையும் போருக்குத் தயார் செய்யுங்கள். மக்கள் பணி செய்யுங்கள். போர்ப் பணிக்குத் தேவையான பின்பணி செய்யுங்கள். எமது சுதந்திரத்தை நாம் போராடியே பெறவேண்டும் என்ற கருத்தை மிக ஆழமாக மக்களுக்கு விதையுங்கள்.



இன்றுள்ள நெருக்கடிக்கு நீங்கள் செய்யும் பணி மிகமிக முக்கியமானதும், இன்றியமை யாதாகவும் இருக்கும். பூனைக்கு மணி காட்டுவது யார் என்று இருக்கலாம். புலிகளின் குரலின் செயலை அதாவது, அவர்களுடைய குரலைக் கேளுங்கள். உங்களுக்கு எல்லாம் விளங்கும். விடுதலை பெற எமக்கான வழி ஒன்றுதான் இருக்கின்றது. அது போராடுவது தான். போரில் நாம் வெற்றி பெற வேண்டுமானால், போர் புரிபவர்களின் பின்னிருந்து, அவர்களுக்கு நம்பிக்கையூட்ட வேண்டும். மாறாக, நாம் வாழ விரும் புவோமானால், நாளை சிங்களவன் என்ன செய்யவான் நீங்களே புரிந்து விரைவாகச் செயற்படுங்கள்.

